# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590


**ஆணை நாள் 05.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 13018/D/2019**

திரு D. ராஜா --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மேலாளர்,
திண்டிவனம் நகராட்சி,
விழுப்புரம் மாவட்டம். --- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 27.09.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 30.10.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 07.11.2019 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 19.11.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 26.12.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (05.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு. D. ராஜா மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு. பிரகாஷ், மேலாளர், திண்டிவனம் நகராட்சி, விழுப்புரம் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் திண்டிவனம் நகராட்சி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாம்பொன்னையா நகர், கால்டுவெல் தெருவில் எத்தனை வீடுகள், எத்தனை காலி மனைகள், சாம்பொன்னையா நகரின் வரைபடம், சர்வே எண், மேற்படி கால்டுவெல் தெருவில் உள்ள ஒவ்வொரு வீடுகளின் அளவு விபரம், மேற்படி கால்டுவெல் தெருவில் வசிக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கை குறித்த முழு விபரம், உள்ளிட்ட விவரங்களை மொத்தம் ஏழு இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (05.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசியின் வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு ஏற்கனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இன்றைய விசாரணையில் தொலைபேசியில் ஆஜரான மனுதாரர் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரிய தகவலான திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாம்பொன்னையா நகர், கால்டுவெல் தெருவில் எத்தனை வீடுகள், எத்தனை காலி மனைகள், சாம்பொன்னையா நகரின் வரைபடம், சர்வே எண், மேற்படி கால்டுவெல் தெருவில் உள்ள ஒவ்வொரு வீடுகளின் அளவு விபரம், மேற்படி கால்டுவெல் தெருவில் வசிக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கை குறித்த முழு விவரங்களை தகவலாக பெற்று வழங்குமாறு கோரினார்.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரருக்கு தனக்கு தேவையான தகவல்களை அலுவலக வேலை நாட்களில் திண்டிவனம் நகராட்சி அலுவலகத்திற்கு நேரடியாக சென்று தகவலைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். அவ்வாறு மனுதாரர் திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தை அணுகும் பட்சத்தில் மனுதாரருக்கு தகவல் வழங்க திண்டிவனம் நகராட்சி அலுவலக மேலாளர் / பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 13018/D/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் / மேலாளர்,
திண்டிவனம் நகராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு D. ராஜா, த/பெ. R. துரை முதலியார் (லேட்),
க.எண். 10, திருவள்ளுவர் தெரு,
திண்டிவனம் தாலுகா,
விழுப்புரம் மாவட்டம்.

Copy to: File
DGPC 09.11.2020